# 10

# அந்தப் பையன்




இந்தச் சின்னக் கதையை எப்படிச் சொல்லுவது என்று புரியவில்லை. அவ்வளவு எளிதானது.

நான் வாலிபப்பருவத்தில், ஞாயிற்றுக்கிழமைகளில் தெருக் குழந்தைகளை எல்லாம் கூட்டிக்கொண்டு ஊருக்கு வெளியே உள்ள வயல் வெளிகளுக்கு அழைத்துச் செல்வது வழக்கம். குருவிக்குஞ்சு மாதிரிச் சுற்றித்திரியும் இந்தச் சின்னவர்களோடே சிநேகமாகப் பழகுவதில் எனக்கு ஒரு அபாரப் பிரேமை.

புழுக்கமும் புழுதியும் குமையும் தெருக்களை விட்டு விட்டு வெளியே வந்து விடுவதில் குழந்தைகளுக்கும் ஆசைதான். தாய்மார் ரொட்டித்துண்டுகள் கட்டிக் கொடுத்தார்கள். நானும் கொஞ்சம் லாஸஞ்சர் வாங்கிக் கொண்டு, ஒரு போத்தல் நிறைய க்வாஸ் (ஒருவகைப்பானம்) நிறைத்துக் கொண்டு புறப்படுவேன். கவலை தெரியாத இந்தச் சின்ன ஆட்டுக் குட்டிகளை நகர் வழியாக வயற்புறம் கூட்டிச் சென்று பசிய நிறம் படர்ந்து கண்ணுக்கு இரம்மியமாக இருக்கும் வசந்தம் அணிந்த கானகத்துக்குக் கூட்டிக்கொண்டு போவேன்.

அதிகாலையிலேயே ஊரைவிட்டுப் புறப்பட்டு விடுவது வழக்கம். மாதாகோயில் மணி உதயகால ஜபத்துக்குக் கூப்பிடும் நேரத்திலேயே புறப்பட்டுவிடுவோம். இளங் குதிக்கால்கள் புழுதியைக் கிளப்பிக்கொண்டு பரிவாரமாக ஓடி வரும். மத்தியானத்தில் சூரிய வெப்பம் உச்சத்தில் இருக்கும் போது, விளையாடிக் களைத்த என் நேசர்கள் கானகத்தின் ஓரத்தில் வந்து கூடுவார்கள். சாப்பிட்ட பிறகு சிறுசுகள் மரநிழலில் படுத்துக் கிடந்து உறங்கும். சற்றுப் பெரிய குழந்தைகள் என்னைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு கதை சொல்லச் சொல்லி வற்புறுத்தும்.

இவர்களுடைய இடையறாத, சலசலப்புடன் என் கதாகாலட்சேபமும் நடைபெறும். வாலிபத்துடுக்கும், தலைக்கொழுப்பும் அனுபவமற்ற சிற்றறிவுக்குள் நிலைத்திருக்கும் வேடிக்கையான நிச்சயத்தன்மையும் எனக்கு இருந்தாலும், சின்ன விவேகிகளிடையே சிக்கிக் கொண்ட இருபது வயதுக் குழந்தையாக இருக்க வேண்டிய நிலைமை எனக்கு அடிக்கடி ஏற்பட்டதுண்டு.

தலைக்கு மேல் என்றும் இருக்கும் வானம் எங்களைக் கவித்தது. கண்ணெதிரே கானகத்தின் வண்ணக்கலவைகள் வாரி எடுத்துக்காட்டி அறிதுயில்போல் ஆழ்ந்தமௌனத்தில் கூடிக்கிடந்தது. ஊசல் காற்று காதில் குசுகுசுவெனப் பேசியது. கானகத்தின் மகரந்த நிழல்கள் சற்றே நடுங்கி மற்றும் மௌனத்தில் ஆழ்ந்தன. இந்தப் புனிதகரமான மௌனம் ஜீவனிலும் துளும்பிப் பரிபூரணப்படுத்தியது.

கரைகாணா நீலவானத்தில் வெள்ளை மேகங்கள் மெதுவாக நீந்தின. சூரிய வெதுவெதுப்பில் ஓங்கி வளரும் மண்ணிலிருந்து பார்க்கும் நமக்கு வானம் உயிர்தரும் வெப்பம் அற்றதாகத் தெரிகிறது. அப்படி இருந்தும் அந்த மேகங்கள் அங்கு கிடந்து உருகுவதும் புதிர் போலத்தான் நமக்குத் தெரிகிறது.

என்னைச் சூழ இந்தக் குழந்தைகள் வாழ்வின் இன்ப துன்பங்களைக் கற்றுத் தெரிந்து கொள்வதற்காக இவ்வுலகிற்குத் தருவிக்கப்பட்டிருக்கின்றனர்.

அந்தக் காலத்தை என்னுடைய நல்ல தசை என்றே சொல்ல வேண்டும். அந்தச் சாப்பாடு எல்லாம் வாஸ்தவமான விருந்துகள். என் ஜீவன் அந்தக் காலத்திலேயே வாழ்வின் இருள் நதியிலே முழுகுண்டு மாசுபட்டிருந்தாலும் குழந்தைகளின் சிந்தனைகள். உணர்ச்சிகள் என்ற தெளிவான விவேகம் என்னைத் தளிர்க்க வைத்தது.

ஒரு நாள், என் குழந்தைப் பரிவாரத்துடன், ஊருக்கு அப்புறமிருந்த வயல் வெளியை மிதிக்கும்போது, நாங்கள் ஒரு அன்னியனைச் சந்தித்தோம். ஒரு சின்ன யூதப்பையன், காலில் ஜோடு கிடையாது, உடம்பில் கிழிசல் சட்டை, கறுப்புப் புருவம், வெண்மையான சுருட்டைத்தலை, ஆட்டுக்குட்டிமாதிரி, அவனை ஏதோ தொந்தரவு படுத்தியிருக்க வேண்டும். அழுது கொண்டிருந்தான் போல் தெரிகிறது. ஒளியற்ற கருங் கண்களைப் பாதுகாத்த இமை வீங்கிச் சிவந்து இருந்தது. முகத்தில் பசிகாட்டும் நீலப்பூப்பு படர்ந்திருந்தது. குழந்தைகள் மத்தியில் ஓடிவந்து தெருவின் மையத்தில் நின்று கொண்டான். குளிர்ந்த காலைப்புழுதியில் காலை ஊன்றி நின்றான். அழகமைந்த அவன் உதடுகள் பயக்குறிகாட்டி மலர்ந்தன. அடுத்த வினாடி ஒரே குதியில் நடை பாதைக்குத் தாவி விட்டான்.

“அவனைப் பிடியுங்கள். சின்ன யூதப் பயல். அந்தச் சின்ன யூதப் பயலைப் பிடியுங்கோ” என்று குழந்தைகள் உற்சாகமாகக் கத்தினர்.

அவன் ஓடிவிடுவான் என நினைத்தேன். அகன்ற கண் ஏந்திய ஒல்லிய முகம் பயக்குறி காட்டியது. உதடுகள் நடுங்கிப்படபடத்தன. கேலி செய்யும் குழந்தைக் கும்பலின் நடுவே நின்றான். உயரத்தைப் பெரிதுபடுத்திக் கொள்ள முயலுவது போல நிமிர்ந்து கொண்டான். தோள்களை வேலியோடு அமுக்கிக் கொண்டு கைகளைப் பின்னுக்கு இறுகக்கட்டிப் பிடித்துக்கொண்டு நின்றான்.



அவன் திடீரென்று அமைதியாகத் தெளிவாக, “ஒரு வித்தை காட்டுகிறேன் பார்க்கிறீர்களா?” என்று கேட்டான்.

தன்னைத் தற்காத்துக்கொள்ள அவன் செய்யும் சூழ்ச்சியென்று நான் முதலில் எண்ணினேன். குழந்தைகளுக்கு அந்த வித்தையில் உடனே ஆசை தட்ட விலகி நின்று வழி கொடுத்தார்கள். சற்று வயசும் முரட்டுத்தனமும் வலுத்தவர்களே அவனைச் சந்தேகத்துடன் கவனித்து நின்றனர். எங்கள் தெருக் குழந்தைகளுக்கும் மற்ற எல்லாத் தெருக் குழந்தைகளுக்கும் சண்டை. தாங்கள் தான் அந்தஸ்த்து மிகுந்தவர்கள் என்பதில் ஸ்திரமான நம்பிக்கை. இதரர்களின் உரிமைகளைப் பற்றி அவர்கள் சட்டை செய்வதில் சிரத்தை கொள்வதில்லை. அவர்கள் சட்டை செய்யாதிருந்தனர் என்பதே உண்மை.

சிறுசுகள் அவனை நம்பினர்.

“உம்... உன் வித்தையைக்காட்டு, பார்ப்போம்” என்றனர்.

அந்த அழகான, ஒல்லியான சிறுவன் வேலி ஓரத்திலிருந்து வந்தான். உடலை வளைத்து தரை மீது கை ஊன்றி வில்போல் வளைந்து நின்றான். காலை உதறி ஒரே துள்ளலில் கைகளைத் தட்டிக்கொண்டு எழுந்து நின்றான்.

‘ஹப்’

பிறகு சகடக்கால் மாதிரி கைகளையும் கால்களையும் விரித்துப் பக்கவாட்டில் சரிந்து சுழன்று சக்கரடித்தான். அக்னி தீய்த்துக் கொண்டு போவது போலிருந்தது அவனுடைய கதி. சட்டை ஓட்டை வழியாகத் தோள்பட்டையும் சாம்பல் பூத்த சருமமும் விலாவெலும்பும் தெரிந்தன. கழுத்து எலும்புகள் கண்டமாலை மாதிரிக் கிடந்தன; அதை அவன் வலுவாக அமுக்கினால் எங்கே ஒடிந்து விடுமோ என்றிருந்தன. முயற்சியால் வியர்வை கொட்டி முதுகுப் புறத்தை நனைத்தது. ஒவ்வொருதரம் விதவிதமான வித்தை காட்டும்போது ஜீவனற்ற ஒரு சிரிப்போடு குழந்தைகளை ஏறிட்டுப்பார்த்தான். ஒளி மங்கிய கண்கள் விரியத் திறந்திருப்பது பார்ப்பதற்கு அகோரமாக இருந்தன. பார்வையில் சிசுத் தன்மையற்ற ஒரு வெறி இருந்தது. குழந்தைகள் கூச்சல் போட்டு அவனைப் பின்பற்றி அவைகளும் புழுதியில் குட்டிக்கரணமடிக்க ஆரம்பித்துவிட்டன. லாவகமற்ற முயற்சிகளால் சரிவதும், விழுவதும், சமயத்தில் கரணம் போட்டு விழுவதும் பொறாமைப்பட்டுப் பார்த்துக் கொண்டிருப்பதுமாகக் குழந்தைகள் குமைந்தன.

இந்தக் கோலாகலம் திடீரென்று முடிவுற்றது. அவன் துள்ளியெழுந்து நின்று அனுபவசாலியான வித்தைக்காரன் மாதிரி புன்சிரிப்போடு கைகளை நீட்டி “ஏதாவது கொடுங்கள்” என்றான்.

குழந்தைகள் மௌனமாக நின்றனர். ஒரு குழந்தை ‘துட்டா’ என்று கேட்டது.

“ஆமாம்” என்றான் பையன்.

“இது நல்ல வேடிக்கையா இருக்கே?”

“துட்டுன்னா நாங்களே நல்லா அது மாதிரி செஞ்சிருப்பமே”.

இந்த வேண்டுகோள், வித்தைக்காரனைத் துச்சமாக மதிக்கும்படி செய்வித்தது. குழந்தைகள் சிரித்துக் கொண்டு கொஞ்சம் வைதுகொண்டு வயற்புறமாக ஓடினர். அவர்களிடம் பணம் கிடையாதுதான். என் வசம் ஏழு கொபெக்குகள்தான் (ருஷ்யச் சில்லறை நாணயம்) வைத்திருந்தேன்.

அழுக்கேறிய அவனுடைய உள்ளங்கையில் இரண்டைக் கொடுத்தேன். அவன் அவற்றை விரலால் தொட்டுப் பார்த்து விட்டு வந்தனம் கூறினான்.

அவன் போகும்போது, முதுகை மூடியிருந்த சட்டையில் கறை படிந்திருப்பதைப் பார்த்தேன். அது தோள் பட்டையுடன் ஒட்டிக்கொண்டு விட்டது.

“நில்லுடா, அதென்ன?” என்றேன்.

அவன் நின்றான்; திரும்பினான்; என்னை ஊன்றிக் கவனித்தான்; பழைய ‘நல்லதனச்’ சிரிப்போடு சாந்தமாகப் பதில் சொன்னான். “முதுகில் இருப்பதா? ஈஸ்டர் பண்டிகையில் சர்க்கஸ் ஆடுகிறபோது டிரிபீஸிலிருந்து நாங்கள் விழுந்துவிட்டோம். அப்பா இன்னும் படுத்த படுக்கையாகத் தான் இருக்கிறார். எனக்குக் குணமாகி விட்டது” என்றான்.

நான் சட்டையைத் தூக்கிப் பார்த்தேன். இடது தோள்பட்டையிலிருந்து துடை வரை முதுகுத் தோல் அப்படியே உரிந்துபோய் ஒரே பெரிய வடுவாக மாறியிருந்தது. புண்வாய் ஆறி உலர்ந்து காய்ந்து பொருக்கேறியிருந்தது. அவன் வித்தை காட்டியபோது பொருக்கில் பல இடங்களில் கீறல் விழுந்து அதன் வழியாக இரத்தம் பீறிட்டுக் கொப்பளித்தது.

“இப்போது வலிக்கவேயில்லை...வலிக்கவேயில்லை, அரிக்கத்தான் செய்கிறது...”

வீரனுடைய நெஞ்சழுத்தப் பார்வையுடன் அவன் பெரிய மனுஷன் குரலோடு “எனக்காக நான் இப்படி வேலை செய்தேன் என்றா நினைக்கிறாய்? சத்தியமா அப்படி இல்லை. எங்கப்பா- எங்கிட்டத் தம்பிடி கிடையாது. எங்கப்பாவுக்கு ரொம்பக் காயம். அதனாலே எப்படியும் வேலை செய்துதானே ஆகணும். எல்லோரும் எங்களைப் பார்த்தால் கேலி செய்கிறார்கள்... போயிட்டு வாரேன்.”

அவன் மலர்ந்த முகத்துடன் குதூகலத்துடனேயே பேசினான். பிறகு விசுக்கென்று வாய்திறந்த வீடுகளைத் தாண்டிச் சென்று மறைந்துவிட்டான்.

இதெல்லாம் அற்ப விவகாரந்தானே. ஆனால் என் ஆயுளில் கஷ்டம் வந்தபோதெல்லாம் இந்தச் சின்னப் பையனுடைய தைரியத்தை அடிக்கடி நினைத்தேன்; நன்றியுடன் நினைத்தேன்.

**மார்க்ஸிம் கார்க்கி**

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| வாலிபம் | - | இளமை |
| பிரேமை | - | மோகம் |
| குமையும் | - | சுழன்று வரும் |
| தெரு | - | ஊரின் பொது வழி |
| ரம்மியம் | - | அழகு / மகிழ்ச்சி தருதல் |
| நேசர்கள் | - | நேசத்துக்குரியவர்கள் / அன்புக்குரியவர்கள் |
| பரிவாரம் | - | உடன் வரும் கூட்டம் / தோழர்கள் |
| கதாகாலட்சேபம் | - | புராணக்கதைகளை இசைப்பாடல்களுடன் கூறி நடத்தும் சொற்பொழிவு |
| விவேகி | - | நிலைமையைத் தெளிவாக அறிந்து செயற்படும் அறிவு உடையவர் |
| ஊசல் | - | பதம் கெட்ட |
| ஜீவன் | - | உயிர் |
| புதிர் | - | மர்மம் |
| வாஸ்த்தவம் | - | உண்மை |
| விருந்து | - | உபசரித்து வழங்கும் சிறப்பான அறுசுவை உணவு |
| தளிர்க்க வைத்தல் | - | மனதில் புதிய ஆசைகள் துளிர்விட வைத்தல் |
| அந்நியன் | - | தங்களுக்கு அறிமுகம் இல்லாதவன் |
| கேலி | - | ஒருவனுடைய நடத்தை, செயல் முதலியவற்றை வேடிக்கை-யாகக் காட்டி சிரிப்பு வருவிக்கும்படி பேசுதல் |
| சூழ்ச்சி | - | தீங்கு செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்படும் தந்திரமான திட்டம் |
| எண்ணம் | - | நினைப்பு / சிந்தனை |
| அந்தஸ்த்து | - | செல்வாக்கு |
| ஸ்திரமான | - | நிலையான |
| தீய்த்தல் | - | எரிந்துபோதல் |
| சருமம் | - | தோல் |
| கண்டமாலை | - | குறிப்பிட்ட சுரப்பிகள் வீங்குவதால் கழுத்தில் ஏற்படும் கட்டி |
| சிசு | - | இளம் குழந்தை |
| துட்டு | - | பணம் / நாணயம் |
| துச்சமாக | - | ஒரு பொருட்டாக கருதப்படாத |
| கறை | - | எளிதில் நீக்கமுடியாதவாறு படிந்திருப்பது |
| சர்க்கஸ் | - | வித்தை |
| வடு | - | தழும்பு |
| தம்பிடி | - | மிகக் குறைந்த மதிப்புடைய நாணயம் |
| ஆயுள் | - | உயிர்வாழும் காலம் |

## கிரகித்தற் பயிற்சி

*1 இச்சிறுகதை ஆசிரியரின் பெயர் என்ன?*

*2 குழந்தைகளின் மத்தியில் அந்நியச் சிறுவன் காட்டிய வித்தை எது?*

*3 இப்பாடத்தில் குறிப்பிடப்படும் பண்டிகை எது?*

*4 அந்நியனின் தோற்றம் இப்பாடத்தில் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது?*

*5. உமது நண்பர்களிடம் காணப்படும் நல்ல பண்புகளை விபரித்து எழுதுக.*

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடுகள்

செயற்பாடு 1: ஒரு விடயம்பற்றி தொலைபேசியில் உரையாடுவதற்கு ஆயத்தம் செய்து ஒரு நிமிட நேரத்திற்குள் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கேட்போருக்கு ஏற்றவகையில் உரையாடுக.

செயற்பாடு 2: சரியான உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் தொனியை வேறுபடுத்தி, பின்வரும் உதாரணங்களை வாசிக்குக.

அ. ஆகா! எவ்வளவு உயரமான மலைகள். எங்கு பார்த்தாலும் தேயிலை நடப்பட்டிருக்கிறதே! (வியப்பு)

ஆ. ஐயோ! பாவம், இந்த வீதியில் திரியும் சிறுவர்களின் வாழ்க்கையைப் பார். (சோகம்)

இ. போ வெளியே! (கோபம்)

ஈ. அந்தச் சிறப்பு விருது அறிவிக்கப்பட்டபோது எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. (மகிழ்ச்சி)

உ. சே! இந்த மோசமான பாதையில் எப்படித்தான் நடப்பதோ. (வெறுப்பு)

செயற்பாடு 3: மேலுள்ள சிறுகதை வெளிப்படுத்தும் கருத்துக்களைக் கலந்துரையாடி எமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளைப் பட்டியற்படுத்துக.

செயற்பாடு 4: பட்டியற்படுத்தப்பட்ட விடயங்களோடு மேலும் விபரங்களைத் திரட்டி 'மனிதனை நேசிப்போம்' என்ற கருத்துப்புலப்பட கட்டுரை ஒன்று எழுதுக. பொருத்தமான தலைப்பிடுக.

செயற்பாடு 5: குழுவாகச் செயற்பட்டு நீங்கள் எழுதிய கட்டுரையில் வரும் பத்துப் பெயர்ச்சொற்களைக் கண்டறிந்து எழுதுக.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## மொழிவளம்

### ▶உருவகம்

உவமானமும் உவமேயமும் இரண்டறக் கலந்து எழுதப்படுவது உருவகமாகும். எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் அதிகமாக உருவகங்களைப் பயன் படுத்துகிறோம். நாம் கூற முற்படும் கருத்துக்களைப் பொருள் ஆழமுள்ளதாகவும் தெளிவுமிக்கதாகவும் மாற்றுவதற்கு உருவகம் உதவுகின்றது.

கொட்டி வைத்த முத்தே!
குவித்து வைத்த ரத்தினமே!
கட்டிப் பசும் பொன்னே! - என்
கண்மணியே! நித்திரையோ?.

இப்பாடலில் குழந்தையை முத்து என்றும் இரத்தினம் என்றும், பொன் என்றும், கண்மணி என்றும் உருவகிப்பதைக் காண முடிகிறது.

அழகன் முருகனிடம்
ஆசை வைத்தேன் - அவன்
ஆலயத்தில் அன்பு மலர்
பூசை வைத்தேன்.

-கண்ணதாசன்-

இந்தப் பாடலில் இடம்பெறும் **அன்பு மலர்** என்பது உருவக அணி ஆகும். அன்பாகிய மலரை முருகனின் ஆலயத்தில் வைத்ததாக கவிஞர் பக்திப் பரவசப்படுகிறார்.

## இலக்கணம்

### ▶அறுவகைப் பெயர்கள்

பெயர்ச் சொற்களை பின்வருமாறு ஆறுவகையாக வகைப்படுத்தலாம். அவையாவன.

1. பொருட்பெயர்
2. இடப்பெயர்
3. காலப்பெயர்
4. சினைப்பெயர்
5. பண்புப்பெயர் (குணப்பெயர்)
6. தொழிற்பெயர்

**பொருட்பெயர்**

பின்வரும் உதாரணங்களைக் கவனிப்போம்

- ★ மணல் வீடு.
- ★ இது உடைந்த மேசையாகும்.
- ★ வாசலில் மரம் நிற்கிறது.
- ★ கிழக்கில் சூரியன் உதிக்கும்.
- ★ கதவு தானே மூடிக் கொண்டது.

இந்த வசனங்களில் வரும் மேசை, மரம், சூரியன், கதவு ஆகியன ஒரு பொருளின் பெயரைக் குறித்து வருகின்றன. இவ்வாறு ஒரு பொருளின் பெயரைக் குறித்து வரும் பெயர்ச் சொற்களை பொருட் பெயர் என்பர்.

**இடப்பெயர்**

பின்வரும் உதாரணங்களைக் கவனிப்போம்.

- ★ அட்டன் உயர் நிலத்தில் உள்ள நகரமாகும்.
- ★ ஊரின் மத்தியில் கட்டிய வீடு.
- ★ தங்கேஸ்வரி நல்லூரிலிருந்து வருகிறாள்.
- ★ ஐரோப்பாவில் ஊர்வலம் நடைபெற்றது.
- ★ இலங்கை எங்கள் இனிய நாடாகும்.

இந்த வாக்கியங்களில் வரும் அட்டன், ஊர், வீடு, நல்லூர், ஐரோப்பா, இலங்கை ஆகிய சொற்கள் இடங்களின் பெயர்களைச் சுட்டி வருகின்றன. இவ்வாறு இடத்தின் பெயரைக் குறித்து வரும் சொற்களை இடப்பெயர் என்பர்.

**காலப்பெயர்**

பின்வரும் உதாரணங்களைக் கவனிப்போம்.

- ★ கோடையும் மாரியும் கண்டதிந்த வீடு.
- ★ பிரபுநாத் திங்கட்கிழமை வருவான்.
- ★ தனலட்சுமி பத்துமணிவரை படித்தாள்.
- ★ பறவைகள் மாலையில் கூட்டுக்குத் திரும்பும்.

இந்த வசனங்களில் இடம்பெறும் கோடை, மாரி, திங்கட்கிழமை, மணி, மாலை ஆகிய சொற்கள் காலத்தின் பெயர்களைக் குறித்து வருகின்றன. இவ்வாறு காலத்தின் பெயரைக் குறித்து வரும் பெயர்ச்சொற்களைக் காலப்பெயர் என்பர்.

**சினைப் பெயர்**

பின்வரும் உதாரணங்களைக் கவனிப்போம்.

- ★ மரத்தின் இலைகள் பச்சை நிறமானவை.
- ★ மரத்தின் வேர்கள் ஆழமாக இறங்கி உள்ளன.
- ★ மரத்தின் கிளைகள் நீண்டு படர்ந்துள்ளன.
- ★ மரத்தின் பூக்கள் கண் சிமிட்டுகின்றனவோ!
- ★ உதிர்ந்த பூ வாய்ப் போன வீடு.

இந்த வசனங்களில் இடம்பெறும் இலைகள், வேர்கள், கிளைகள், பூக்கள் ஆகிய பெயர்ச் சொற்கள் மரத்தின் சினையை அதாவது ஒரு பகுதியைக் குறித்து வருகின்றன. இவ்வாறு ஒன்றின் அங்கத்தை அல்லது பகுதியைக் குறித்து வரும் பெயர்ச் சொற்களைச் சினைப் பெயர் என்பர்.

முழுமையொன்றின் பகுதிகளே சினைப்பெயர்களாகும்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

**பண்புப் பெயர்**

பின்வரும் உதாரணங்களைக் கவனிப்போம்.

- ★ வெண் மணல் வீடு.
- ★ மூன்று கோணங்களை உடையது முக்கோணி.
- ★ தம்பி உயரம் கூடியவன்.
- ★ பாகற் காய் கசப்புச் சுவையானது.
- ★ நாங்கள் மகிழ்ச்சியாய் இருக்கின்றோம்.

இந்த வசனங்களில் இடம் பெறும் வெண்(மை), முக்கோணம், உயரம், கசப்பு, மகிழ்ச்சி ஆகிய பெயர்ச் சொற்கள் ஒன்றின் பண்பைக் குறித்து நிற்கின்றன. இவ்வாறு ஒன்றின் பண்பைக் குறித்து நிற்கும் பெயர்ச் சொல் பண்புப் பெயர் எனப்படும்.

நிறங்கள், வடிவங்கள், உணர்ச்சிகள் போன்றவற்றை குறித்துவரும் பெயர்கள் பண்புப்பெயர்களாகும்.

**தொழிற் பெயர்கள்**

பின்வரும் உதாரணங்களைக் கவனிப்போம்.

- ★ ஆடுதல் பாடுதல் செய்து கட்டிய வீடு.
- ★ கடவுளை வணங்குதல் மகிழ்ச்சியானது.
- ★ எவருக்கும் கெடுதல் செய்யலாகாது.
- ★ எல்லோரையும் சிரிக்க வைத்தல் அவன் தொழில்.

இந்த வசனங்களில் இடம்பெறும் ஆடுதல், பாடுதல், வணங்குதல், கெடுதல், ஆகிய பெயர்ச் சொற்கள் ஒரு செயலைக் குறித்து வருவதால் இவற்றைத் தொழிற் பெயர் என்பர்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களில் இடம் பெறும் பெயர்ச் சொற்களை இனங்கண்டு எழுதுக.**

1 பந்து விளையாடினேன்.

2. இமான் கை, கால் கழுவினான்.

3. நாங்கள் கொழும்புக்குப் போனோம்.

4. இன்று மாலை வருவேன்.

5. கோபம் வேண்டாம்.

6. வட்டம், முக்கோணம், சதுரம் பற்றிப் படிப்போம்.

7. பனை மரத்தின் இலை, காய், கிழங்கு ஆகியன பயனுடையன.